10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 231 புதன்கிழமை ஜனவரி 10 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48




கச்சதீவு அந்தோனியார் திருவிழா

## 10,000 இலங்கையருக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 10

வரலாற்று சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் பெப்ரவரி 23, 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

06▶



## அம்புலன்ஸில் 15 பிரசவங்கள்

மன்னார், ஜன.10

"மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் 15 பிரசவங்கள் அம்புலன்ஸ் வண்டியில் நடந்துள்ளன. இப்படியான நிலையைத் தடுக்கக் கோரி ஜனாதிபதியிடம் முறையிட, இன்னும் அனுமதி கிடைக்காமல் முதலமைச்சர் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது" வடமாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன்

06▶

## யாழ். வருகிறார் ஜனாதிபதி



யாழ்ப்பாணம், ஜன. 10

ஜனாதிபதி மைத்தரிபால சிறிசேன எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடக்கவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்துப் பேசவே அவர் யாழ்ப்பாணம்

06▶



### கொக்காவிலில் கோர விபத்து:

# 4 இளைஞர்கள் துடிதுடித்துப் பலி!

கிளிநொச்சி, ஜனவரி 10

வீதியில் நின்ற லொறியுடன் வேகமாக வந்த ஹைஏஸ் வான் மோதிய விபத்தில், அதில் பயணித்த நான்கு இளைஞர்கள் துடிதுடித்து சம்பவ இடத்திலேயே பலியாகினர். ஒருவர் படுகாயமடைந்தார்.

06▶

ஹெரோயின் வைத்திருந்தவருக்கு

## 15 மாதங்களின் பின்னர் பிணை

யாழ்ப்பாணம், ஜன. 10

ஹெரோயின் போதைப் பொருள் 836 மில்லிக் கிராமை விற்க வைத்திருந்தார் என்ற, குற்றச்சாட்டில் கைதானவருக்கு 15 மாத விளக்கமறியலின் பின்னர் நேற்றுப் பிணை வழங்கியது யாழ். மேல் நீதிமன்றம்.

06▶

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

## படுகொலை நினைவுநாள் இன்று



யாழ்ப்பாணம், ஜன. 10

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவு தினம் யாழ். நகரின் முற்றவெளியில் உள்ள நினைவுத் தூபியில் இன்று இடம்பெறவுள்ளது.

நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1974 ஜனவரி 3 ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை யாழ்.

06▶

# நன்மதிப்பு கெட்டு நிற்கிறேன் கல்வி அமைச்சரின் செயலால்

### வடக்கு உறுப்பினர் சபையில் பகிரங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 10

வடக்கு கல்வி அமைச்சரின் செயலால் தனது நன்மதிப்புக்கு களங்கம் ஏற்பட்டு விட்டது எனச் சாடியிருக்கிறார் வட மாகாண சபை உறுப்பினர் தியாகராசா. அத்துடன் அமைச்சர்களின் நியமனத்தில் முதலமைச்சர் தவறிழைத்து விட்டார் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று நடந்த வட மாகாண சபையின் 115 ஆவது அமர்வில் கருத்து வெளியிட்ட போதே கல்வி அமைச்சர் மீது உறுப்பினர் தியாகராசா அடுத்தடுத்துக் குற்றங்களை சுமத்தினார்.

மாகாண சபை உறுப்பினர்களின் முன்மொழிவுகளுக்கு

06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES

Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

www.relianceinternationalms.com



ADVICE FOR ALL AUSTRALIAN VISAS AND CITIZENSHIP

RELIANCE INTERNATIONAL MIGRATION SERVICES

Australian Office :
Address: No: 9, Quarters Blvd,
Cranbourne West , VIC 3977
Tel : 61459450000

Sri Lanka office :
Contact Swarna
33/1 Kirillapone Avenue
Colombo 5, Sri Lanka.
Mobile : 0773112240 , 5637668

Consultation by appointment only,
Tel: 0459450000
Email: relianceinternationalms@gmail.com
rimigrationservices@bigpond.com
Web: www.relianceinternationalms.com



MIA
Member of Migration Institute of Australia

Contact us for consultation with
Thilinika Wijesinghe
Registered Migration Agent
(MARN: 1463863 MIA: 8531)

## கேபிள் துண்டிப்பாலேயே தயா மாஸ்டருக்கு அடி!

யாழ்ப்பாணம், ஜன.10

வீடொன்றில் தொலைக்காட்சி கேபிள் துண்டிக்கப்பட்டமையினாலேயே, விடுதலைப் புலிகளின் முன்னாள் பேச்சாளர் தயா மாஸ்டர் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டதாகப் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற தொடர்பாடல் பிரச்சினை காரணமாக பெரும்பான்மையான கேபிள் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. தயா மாஸ்டர் இயக்குநராகச் செயற்படும் தொலைகாட்சியிலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் குடிபோதையில் இருந்த சந்தேக நபர் ஆத்திரமடைந்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பணம் செலுத்தாமையினால் குறித்த நபரின் வீட்டுக்கான கேபிள் சேவையின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் குறித்த நபர் கோபமடைந்ததாலேயே அவர் தயா மாஸ்டரைத் தாக்கினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவரான, யாழ்ப்பாணத்தை சேர்ந்த 52 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தயா மாஸ்டருக்குச் சிறிய காயங்கள் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ)

## போலிக் காசுடன் இருவர் கைது

கொழும்பு, ஜன.10

போலி நாணயத் தாள்களை வைத்திருந்த இரண்டு பேர், பாணந்துறைப் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் படி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, இந்த சந்தேகநபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து, 5 ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்கள் ஒன்பது கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# 45 இலட்சம் மாணவர்களுக்கு சுரக்ஷா காப்புறுதி வசதி

கொழும்பு, ஜன.10

நாட்டிலுள்ள அனைத்துத் தேசியப் பாடசாலைகள், மாகாணப் பாடசாலைகள், தனியார் மற்றும் சர்வதேசப் பாடசாலைகள் என்பவற்றில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்காகவும், கல்வியமைச்சினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள 'சுரக்ஷா' காப்புறுதித் திட்டத்தில், சுமார் 45 இலட்சம் மாணவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்று கல்வியமைச்சுக் கூறியுள்ளது.

Suraksha
Protect forever the children of the nation

பாடசாலை மாணவர்களுக்கான 'சுரக்ஷா' காப்புறுதித் திட்டத்தின் கீழ் எவரும் விரைவாக அனுகூலம் பெறக்கூடிய வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. இதில், மருத்துவக் காப்பீடு, வைத்தியசாலை வசதிகள் போன்றவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

'சுரக்ஷா' காப்புறுதித் திட்டம், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை, அனுகூலங்கள் கோரி 2,200க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2018 ஜனவரி முதலாம் திகதி வரை, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால், கல்வியமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற தரவுகளின் பிரகாரம், 'சுரக்ஷா' காப்புறுதித் திட்டத்தின் கீழ், 70 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகை, மாணவர்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## சண்டை பிடித்த காதலர்கள் சடலமாக வவுனியாவில் மீட்பு



வுனியா , ஜன.10

வவுனியா மகாறம்பைக் குளம் பகுதியில் இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா மகாறம்பைக் குளம் பொலிஸ் காவலரணுக்குப் பின்புறம் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து நேற்றுக் காலை 10.00 மணியளவில் காயங்களுடனும், தூக்கில் தொங்கிய நிலையிலும் இந்த இரு சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கணவனைப் பிரிந்த நிலையில் தனிமையில் வாழ்ந்து வந்த செல்வம் புஸ்பராணி என்பவர் அவரது மகளின் மகளுடன் (பேத்தியுடன்) வாழ்ந்து வந்தார்.

இந்த நிலையில் வவுனியா நெளுக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த பியசேனகே எதிரிசிங்க என்பவருடன் புஸ்பராணிக்குக் காதல் ஏற்பட்டுள்ளது. நேற்றையதினம் மாலை எதிரிசிங்கவுக்கும் புஸ்பராணிக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டது. இதன் காரணமாக தொலைக்காட்சியின் சத்தத்தை அதிகரித்து விட்டு இருவரும் முரண்பட்டுள்ளனர். பின்னர் குறித்த பெண் உடல் முழுவதும் பலத்த காயங்களுடன் சடலமாகக் காணப்பட்டதுடன் குறித்த நபரும் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த பெண்ணின் பேத்தி அயலவர்களுக்கு தெரிவித்ததையடுத்து, பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த தடயவியற் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)



## தேன் கூடு கலைந்ததால் ஐவருக்கு குளவிக் கொட்டு

மஸ்கெலியா, ஜன.10

காட்டு மஸ்கெலியா தோட்டத்தில் குளவிகளின் தாக்குதலுக்கு இலக்காகி நான்கு பெண்கள் உட்பட ஐந்து பேர் மஸ்கெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை வேளையில் இடம்பெற்றுள்ளது.


பறவை ஒன்று தேன் குடிப்பதற்காக குளவி கூட்டினைத் தாக்கியதாலேயே குளவிகள் கலைந்து, தேயிலை மலையில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த தொழிலாளர்களைத் தாக்கியுள்ளன.

குளவிக்கொட்டில் சிக்கிய ஐவரில் ஒரு பெண்ணும், வாய்பேச முடியாத நபர் ஒருவரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# மருத்துவம், பொறியியலை ஆளும் யாழ். தமிழர்கள்

## ஆளுநர் வைத்த 'ஐஸ்'





யாழ்ப்பாணம், ஜன.10

"இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் உயர் பதவிகளை யாழ்ப்பாணத் தமிழர்களே வகிக்கின்றனர்" என்று புகழாரம் சூட்டியுள்ளார் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே.

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய மாணவர்களுக்கு தென்னிலங்கை வர்த்தகரான சஞ்சீவ ஜெயவர்த்தனவும் அவரது நண்பர்களும் சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை நேற்று வழங்கினர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கற்றல் பொதிகளை வழங்கிய போதே, வட மாகாண ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார். பாடசாலை அதிபர் வை.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், சு.சுந்தரசிவம், உதவிக் கல்வி பணிப்பாளர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

"தென்னிலங்கையிலிருந்து சிங்கள மொழி பேசும் நண்பர்கள் உங்களுக்காக பல இலட்சம் ரூபா செலவழித்து இங்கே வந்திருப்பது நாம் அனைவரும் ஒற்றுமையாக இந்த நாட்டில் வாழ வேண்டும் என்ற செய்தியை சொல்வதற்காகவே. அவர்கள் அன்பு, இரக்கம், கருணை போன்றவற்றை மனங்களில் ஏந்தி, உங்களுக்கு உதவி செய்ய வந்திருக்கின்றார்கள். உங்களிடமிருந்து எதனையும் அவர்கள் எதிர்பார்த்து இந்த உதவிகளைச் செய்யவில்லை. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தமது கல்வியில் உயர் நிலையினை அடைய வேண்டும் என்ற நோக்கோடே இந்தக் கற்றல் உபகரணங்களை அங்கிருந்து கொண்டுவந்து உங்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள்.

கொழும்பிலும், வெளிநாடுகளிலும் உயர் பதவிகளை வகிப்பவர்கள் தமிழர்களே. பொறியல் துறையிலும், மருத்துவத்துறையிலும் யாழ்ப்பாணத் தமிழர்களே சிறந்து விளங்குகின்றார்கள்.

எனவே நீங்களும் அதேபோன்று சமூகத்தின் உயர்நிலையை அடையும் போது மத, இன, குலம், மொழி என்று வேறுபாடு பார்க்காது நாட்டில் வாழும் அனைவருக்கும் உங்களது சேவையை வழங்க வேண்டும் என்றே நான் எதிர்பார்கின்றேன்" என்றும் இதன்போது ஆளுநர் தெரிவித்தார்.

ஆளுநரின் உதவிச் செயலர் ஜே.எக்ஸ். செல்வநாயகம், அந்தரங்கச் செயலர் ஜே.எம். சோமசிறி, மக்கள் தொடர்பு அதிகாரி நிசாந்த அல்விஷ் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (அ)

எதிரொலி Ethiroli
புதன், 10 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

# எப்படி மறப்போம்?

தமிழினத்தின் தலைவிதியைத் தீர்மானித்த, தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நிகழ்ந்து இன்றோடு 44 வருடங்கள். இந்தப் படுகொலைச் சம்பவம் தான், இனி மேல் ஜனநாயக வழிமுறையை விடவும் ஆயுதமேந்துவதே தமிழினத்தைப் பாதுகாக்கும் என இளைஞர்கள் தீர்க்கமாக முடிவெடுக்க வைத்தது. சிவகுமாரன், பிரபாகரன் போன்ற தமிழினத்தின் ஆதர்சநாயகர்களை தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளே ஓர்மம் கொண்ட போராளிகளாக மாற்றின.

1974 ம் ஆண்டு ஜனவரி 3 ம் திகதி தொடக்கம் 10 ம் திகதி வரை தமிழ் மக்கள் தமது மொழி, பண்பாடு என்பவற்றை உள்ளடக்கி நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தார்கள். மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதை அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் விரும்பவில்லை. அரசாங்கம் இதனை ஏற்றுக் கொள்ளாமல் கொழும்பில் நேரடியாகவும் யாழ்ப்பாணத்தில் மாநகர மேயர் ஊடாகவும் தொடர்ச்சியான தடைகளை ஏற்ப்டுத்தியது. அத்துடன் மாநாடு நடைபெறுவதற்கான முக்கிய அரங்குகளின் அனுமதி இறுதி நேரம் வரை மறுக்கப்பட்டிருந்தது. மாநாட்டில் கலந்து கொள்ள பல வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக்கப்பட்டது.

இவைகள் எவ்வாறு இருந்தாலும் மாநாட்டை சிறப்பாக நடாத்தவேண்டும்என்றமனஎழுச்சிஅமைப்பாளர்களிடமும் மக்களிடமும் இருந்தது. மக்கள் அலைஅலையாக திரண்டதைக்கண்ட அரசாங்கம் சற்றுக் கீழ் இறங்கி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கியது.

மாநாட்டுக் குழுத்தலைவர் நீதியாளர் தம்பையா மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு விரும்பவில்லை. ஆகையால் அவர் தலைவர் பதவியிலிருந்து வில்க பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் தழிழாராட்சி மாநாடு மூன்றாம் திகதி ஆரம்பமாகி பத்தாம் திகதி வரை யாழ் .முற்றவெளி திறந்த வெளியரங்கில் சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் யாழ் நகரம் வந்தார்கள். அதுவரை நடைபெற்ற எந்த ஒரு மாநாடும் இது போல சிறப்பாக நடைபெறவில்லை. அன்றைய தினம் குடாநாடு விழாக்கோலம் பூண்டிருந்தது.

1974 ம் ஆண்டு ஜனவரி 10 ம் திகதி நிறைவு நாளாகக் கொண்டாடப்பட்டது. இறுதி நிகழ்வாக தமிழின் பெருமைகளையும் பண்பாட்டின் பெருமைகளையும் பற்றிப் பேசினார்கள். மக்கள் உணர்வோடு கைதட்டி உற்சாகப் படுத்தினர். இறுதியாக தமிழக பேராசிரியர் 'நைனா முகமது' அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது யாழ் உதவி காவற்றுறை மாஅதிபர் சந்திரசேகரா தலைமையிலான காவற்றுறை மாநாட்டில் கலந்து கொண்ட மக்களைத் தாக்கியதுடன் துப்பாக்கியாலும் சுட்டார்கள். இச்சம்பவத்தில் 09 பொதுமக்கள் உயிரிழந்தார்கள் பலர் காயமடைந்தனர். அரங்குகள் சேதமடைந்தன. இம்மாநாட்டினைக் குழப்பிய யாழ் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசேகரா பின்னர் ஜனாதிபதி சிறிமாவே பண்டார நாயக்கவால் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியுயர்த்தப்பட்டார்.

வேலுப்பிள்ளை கேசவராஜன், பரஞ்சோதி சரவணபவன், வைத்தியநாதன் யோகநாதன், யோன்பிடலிஸ் சிக்மலிங்கம், குலேந்திரன் அருளப்பு, இராசதுரை சிவானந்தம், இராஜன் தேவரட்னம், சின்னத்துரை பொன்னுத்துரை, சின்னத்தம்பி நந்தகுமார் ஆகியோர் இந்த வெறியாட்டத்தில் பலியாகியிருந்தனர்.

தமிழினத்தின் ஆன்மாவை, இந்தப் படுகொலைகள் மூலம் அச்சத்துக்குள் வீழ்த்தி, உரிமைக்கான எத்தனிப்பை இல்லாமல் செய்யவே பேரினம் நினைத்தது. ஆனால் அவர்கள் நினைத்து ஒன்று, நடந்ததோ வேறொன்று. சரித்திரத்தின் படிக்கல்லாக மாறிப்போன தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளை தமிழினம் எப்போதும் மறக்காது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# தயா மாஸ்டரைத் தாக்கிய முதியவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்ப்பாணம் டான் தொலைக்காட்சி ஒளிபரப்பு கலையகத்துக்குள் கத்தி, பொல்லுடன் அத்துமீறி நுழைந்து அந்த நிறுவனத்தின் செய்திப் பணிப்பாளர் தயா மாஸ்டரைத் தாக்கிய வயோதிபரை எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் வைத்திய சாலை வீதியில் அமைந்துள்ள டான் தொலைக்காட்சி ஒளிபரப்புக் கலையகத்துக்கு நேற்று முன் தினம் மாலை வயோதிபர் ஒருவர் அத்துமீறி நுழைந்தார். அவரது கைகளில் வெட்டுக்கத்தி மற்றும் பொல்லு என்பன இருந்தன.

கலையகத்தின் வரவேற்பு அறைக்குள் நுழைந்த அவர் அங்கு பணியிலிருந்த செய்திப் பணிப்பாளர் தயா மாஸ்டர் என அழைக்கப்படும் வே.தயாநிதியைத் தாக்கினார்.

தயா மாஸ்டரை அவர் கத்தியால் வெட்ட முற்பட்ட போது சக பணியாளர்கள் அவரைக் காப்பாற்றினர். அடாவடியில் ஈடுபட்ட முதியவரைத் துரத்திப் பிடித்த டான் நிறுவனப் பணியாளர்கள், அவரைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

முதியவரிடம் நேற்று முன் தினம் மாலை தொடக்கம் நேற்று மாலைவரை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர்.

ஆயினும் விசாரணையின் போது முதியவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் போன்றே வாக்குமூலம் வழங்கினார்.

"எனது மூளைக்குள் இரும்புத் தகட்டைச் சொருகி டான் நிறுவனத்தினர் என்னிடமுள்ளவற்றைப் பெறுகின்றனர்.


என்னிடம் கைபேசியில்லை, எனது மூளைக்குள் மெமரிக்காற்ட் உள்ளது. தேவையான போது அதனைக் கைபேசியாகப் பயன்படுத்துவேன்" என்று அவர் விசாரணையின் போது உளறினார்.

20 வருடங்களுக்கு மேலாக அவர் ஐரோப்பிய நாடுகளில் பணியாற்றிவிட்டு நாடு திரும்பியுள்ள அந்த முதியவர் தற்போது யாழ். பிரதான வீதியுள்ள அந்திய கால சேவை நிறுவனத்தில் பணியாற்றுகிறார்.

முதியவரை யாழ்ப்பாணம் நீதிவான் முன்னிலையில் நேற்று முன்னிரவு பொலிஸார் முற்படுத்தினர். அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் போன்று நடந்து கொள்கிறார் என நீதிவானிடம் பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

"முதியவரின் செயற்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். வழக்கு விசாரணை வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் இடம்பெறும். அன்றைய தினம்வரை சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்படுகிறார்" என்று யாழ்ப்பாணம் நீதிவான் சி. சதீஸ்தரன் உத்தரவிட்டார். (அ)

## இன்றைய கேலிச்சித்திரம்




# இளைஞர் கொலை! சி.ஐ.டி. அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 10

அரியாலை இளைஞர் கொலை தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகள் தேவை என யாழ். நீதிவான் நீதிமன்றுக்கு சி.ஐ.டி. அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அரியாலை - மணியந்தோட்டம் இளைஞன் படுகொலை தொடர்பான வழக்கு நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. இதன் போதே சி.ஐ.டி. அறிக்கை சமர்ப்பித்தது. இதையடுத்து சந்தேகநபர்களின் விளக்கமறியல் வரும் 22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. (ச)

# விபத்தில் இறந்த சிறுமியின் தாத்தாவும் நேற்று மரணம்

யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்ப்பாணம் - நீர்வேலி பகுதியில் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் இறந்த சிறுமியின் தாத்தாவும் நேற்று உயிரிழந்தார். நீர்வேலி - அத்தியார் இந்துக் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் 6 வயதுச் சிறுமியும், முச்சக்கரவண்டியின் சாரதி ஒருவரும் உயிரிழந்திருந்தனர். மேலும் இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு காயமடைந்தவர்களில் உயிரிழந்த சிறுமியின் தாத்தாவான 65 வயதுடைய துரைசிங்கம் என்பவரும் ஒருவர். அவரே நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். (அ)

# கட்டுத் துவக்குடன் இருவர் கைது

வவுனியா, ஜன.10

வவுனியா - பாலமோட்டைப் பகுதியில் கட்டுத் துப்பாக்கியுடன் இருவர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து, இரண்டு கட்டுத் துப்பாக்கிகளும், மரை இறைச்சியும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

மேலும், முதலில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பின்னர் ஒருவர் தப்பி ஓடிவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதே வேளை, பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# கருணாவுக்கு தடை நீக்கம்



கொழும்பு, ஜன.10

கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு வெளிநாடுகளுக்கு செல்ல விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளது.

கருணா பிரதி அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட குண்டு துளைக்காத ஜீப் வாகனத்தினை மீளக் கையளிக்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதில் கருணா கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், அண்மையில் இந்த வழக்கிலிருந்து நிரந்தரமாகவும் விடுதலையாகினார். இந்த நிலையில் இவருக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணங்களுக்கான தடையும் தற்போது நீங்கப்பட்டுள்ளது. குறித்த வழக்கு நேற்றைய தினம் கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்தத் தடை விலக்கப்பட்டது. (அ)

# மாணவன் பலி!

கிளிநொச்சி, ஜன. 10

முழங்காவிலில் இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் க.பொ.த. சாதாரண தரத்தில்கல்வி பயிலும்முழங்காவிலை சேர்ந்த மாணவரே உயிரிழந்தார்.

மேலும், இந்த விபத்தில் படுகாயமடைந்த மற்றொரு மாணவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார். கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச)

## இன்று நாளும் கோளும்

10.01.2018 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 26 ஆம் நாள்

நவமி பகல் 10.13 மணி வரை | சித்திரை 08.09 வரை | சித்தயோகம்

இராகுகாலம் 12.00 - 01.30 | சுபநேரம் மு.ப. 09.30 - 10.30 | எமகண்டம் மு.ப. 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நலம் | நட்பு | ஆர்வம் | பயம் | விருத்தி | செலவு | பாராட்டு | வெற்றி | சலனம் | சாதனை | அமைதி | அலைச்சல் |



# மொரகஹகந்த நீர்த்தேக்கம் மக்களிடம் கையளிப்பு

கொழும்பு, ஜன.10

பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமான மொரகஹகந்த நீர்த்தேக்கத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று மக்களிடம் கையளித்தார்.

மகாவலி திட்டத்தின் ஐம்பெரும் நீர்த்தேக்கங்களுள் இறுதி நீர்த்தேக்கமான மொரகஹகந்த செயற்திட்டத்தினால் 3 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் புதிதாக பயிர் செய்து 15 இலட்சம் குடும்பங்கள் வாழ்வாதாரத்தைப் பெறுவதுடன், 3 இலட்சம் குடும்பங்களுக்கும் மேற்பட்டோர் சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்ளவுள்ளனர். தற்போது பூரணமாக நீர் நிரம்பியுள்ள இந்நீர்த்தேக்கத்தின் மொத்த நீர்க் கொள்ளளவு 6 இலட்சத்து 60 ஆயிரம் கனஅடிகளாகும். இது பராக்கிரம சமுத்திரத்தின் நீர்க் கொள்ளளவினைப் போன்று ஆறு மடங்காகும்.

ரஜரட்ட விவசாய மக்களுக்காக ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் நீண்டகால கனவான மொரகஹகந்த செயற்திட்டத்தின் நிர்மானப்பணிகள் 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் போதியளவு அரச அனுசரணை கிடைக்காமை காரணமாக அந்த பணிகள் தாமதமடைந்தன. 2015 ஜனவரி 08 ஆம் திகதி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட மைத்ரிபால சிறிசேனவின் தனிப்பட்ட அர்ப்பணிப்பும் முயற்சியும் காரணமாக இந்தச் செயற்றிட்டம் துரிதப்படுத்தப்பட்டது.

நினைவுப்பலகையை நேற்று திரை நீக்கம் செய்து , மொரகஹகந்த நீர்ப்பாசன செயற்திட்டத்தை மக்களிடம் கையளித்த ஜனாதிபதி, அதன் பின்னர் மகா சங்கத்தினரின் பிரித் பாராயணங்களுக்கு மத்தியில் நீர்த்தேக்கத்தின் வான் கதவுகளை திறந்துவைத்து நீரோட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

25 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்புக்கு ஒன்றுசேர்க்கும் நீர் மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகளும் இதன்போது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் உள்நாட்டு, வெளிநாட்டு அதிதிகளும் கலந்துகொண்டனர். (அ)

## மலேசிய மருந்து நிறுவனம் இலங்கையில் கால்பதிப்பு

கொழும்பு, ஜன.10


இலங்கை மருந்துத் தயாரிப்பு வலயத்தில் மலேசியா நாட்டைச் சேர்ந்த சுல்தான் அப் ஜோர் மற்றும் மலேசிய நிறுவன உரிமையாளர் பற்றிக் லிம் சூ கிற் ஆகியோர் 100 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்யவுள்ளனர்.

இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் இதுதொடர்பில் குறித்த நிறுவனத்துடன் உடன்படிக்கையைச் செய்து கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மருந்து உற்பத்தி தயாரிப்பு வலயம் வெலிப்பன்ன என்ற பிரதேசத்திலேயே அமைந்துள்ளது. இலங்கை முதலீட்டுச்சபை இதற்கென 50 ஏக்கர் நிலப்பகுதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

இது வர்த்தக ரீதியிலாக மாத்திரம் அன்றி இலங்கை மக்கள் பலரும் நன்மை அடையக்கூடிய வகையில் இதற்கான திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இலங்கை மக்களுக்கும் மலேசிய மக்களுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் அடிப்படையில் இது நடைபெறவுள்ளது. (அ)

## தபால் வாக்களிப்புக்கு திடீரென வந்த சிக்கல்



கொழும்பு, ஜன.10

தபால் ஊழியர்கள் இன்றுமுதல் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதால், அது தபால் மூல வாக்களிப்புக்கு சிக்கலை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்முறை உள்ளூராட்சிமன்றத் தேர்தலில், தபால் மூலம் வாக்களிப்பதற்கான வாக்காளர் பதிவுகளின் இறுதிக் கட்டப் பணிகள் நிறைவடைந்து, வாக்களிப்புப் பத்திர விநியோகங்கள் இன்று புதன்கிழமை முதல் முன்னெடுக்கப்பட உள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, தபால் சேவை ஊழியர்களால் இன்று முதல், தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனால், வாக்களிப்புப் பத்திர விநியோக நடவடிக்கைகள் முடங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறான தடங்கல்கள் ஏற்பட்டால், மாற்று வழிகளில் தேர்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

மாவட்டத் தேர்தல் அலுவலகங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள், எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளன.

ஏனைய அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள், எதிர்வரும் 25 மற்றும் 26ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## முல்லைச் சிறாரின் கல்வி பாதிப்பு

முல்லைத்தீவு , ஜன.10

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுவர்களின் கல்வி நிலை அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

கல்விகற்க ஆர்வமுள்ள சிறுவர்கள் பல்வேறு கூலி வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக அவர்களது கல்வி முற்றிலும் முடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலை செல்லவிரும்பும் சிறுவர்களுக்கு போதிய அடிப்படைவசதி இல்லாத காரணத்தினால் அவர்களைப் பாடசாலைக்கு அனுப்ப முடியவில்லை என வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர். எனவே சிறுவர்களின் கல்வி நிலை தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு பிரிவினர் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

## பளைச் சூட்டுச் சம்பவம் பொலிஸுக்குச் சந்தேகம்

கிளிநொச்சி, ஜன.10

கிளிநொச்சி, பளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். காயமடைந்த நபரின் காயங்களே இந்தச் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பளைப் பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடைய சி.சுரேந்திரன் என்பவர் வெடிகுண்டு செயலிழக்க செய்யும் தனியார் நிறுவனத்தில் பணியாற்றுகிறார். சுரேந்திரன் நேற்றிரவு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சென்று வீடு திரும்பும்போது வீட்டுக்கு அருகில் இருந்து அவரை இனம் தெரியாதோர் துப்பாக்கியால் சுட்டதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

எனினும் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்ற பகுதிக்கு சென்ற பொலிஸார், மேற்கொண்ட சோதனையின் போது எந்தவொரு தடயப்பொருளும் கிடைக்கவில்லை. துப்பாக்கிச் சூடு பட்டதாகக் கூறப்படும் நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையில் அவரது நெஞ்சுப்பகுதிக்கு அருகில் சைக்கிள் போல்ஸ் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு நீக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவரின் நிலைமை ஆபத்தாக இல்லை என வைத்தியசாலை தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, காயமடைந்தவர் வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவின் ஊழியர் என்பதனால் ஏதாவது சோதனையிடும் போது இடம்பெற்ற வெடிப்பாக இருக்கலாம் என்று பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இல்லையெனில் தனிப்பட்ட பிரச்சினைக்காக யாரேனும் அவரை சைக்கிள் போல்ஸ் பயன்படுத்திச் செய்யப்பட்ட துப்பாக்கி மூலம் சுட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ)



## “உங்களாலை எத்தினைபேருக்கு இட்டிடைஞ்சல் தெரியுமோ?

ஒருத்தி தன்ரை முத்தத்திலை வந்து ஏறினமாதிரி மோட்டச் சைக்கிளிலை வந்து கே.கே.எஸ் றோட்டிலை ஏறினாள். எனக்கு ஒருக்கா நெஞ்சு பகீர் எண்டிது. ஏனெண்டால் அவள் வந்து என்ரை சைக்கிளிலை மோதின மாதிரி நிப்பாட்டிப் போட்டு என்ன? ஐயா உங்களுக்குச் சரியாச் சைக்கிள் ஓடத் தெரியாதோ? எண்டு கேள்வி கேட்டுவிட்டுப் போறாள். உதை நான் அவளிட்டைத் திருப்பிக் கேட்டிருக்க வேணும். ஆனால் நிண்டாத்தானே? ஒரே முறுக்கல் ஒரு கட்டைக்கு அங்காலை போறதைத்தான் பாத்தனான்.

உது மட்டுமில்லை இப்ப ஒரு கிழமைக்கு முன்னம் பாத்தன். ஒரு மோட்ட சைக்கிளிலை முன்னுக்கு ஒரு பிள்ளை. அதுக்கிடையிலை ஒரு வட்டன். பின்னுக்குக் கதிரையிலை இருக்கிறமாதிரி ஒருத்தி மடியிலை, சத்தியமா நம்பமாட்டியள் ஒரு 3– 4 மாதக் குழந்தையை ஒரு துணியிலை சுத்தி வைச்சுக் கொண்டு இருக்கிறா. இத்தனைக்கும் சைக்கிள் ஓடுறவ சீலை கட்டினவ. தலைமயிர் ஒரு இரண்டடி நீளத்துக்கு விரிச்சு விட்டபடி பறக்கிது. அள்ளி அமத்திக் கொண்டு கண்விண் தெரியாமல் போறா.

ஒரு கதைக்குச் சொல்லுவம். குறுக்காலை ஒரு நாய் பாய்ஞ்சிட்டு தெண்டு வைப்பம்.. எப்பிடி உவ தன்ரை சைக்கிளைக் கொன்றோல் பண்ணுவ? நேரை எங்கையேன் கொண்டு போய் மோதினால் முன்னுக்கிருக்கிற இரண்டு வட்டன்களும் பிறதட்டைதான் பண்ணுங்கள். பின்னுக்கிருக்கிறவ பிள்ளையோடை விழுந்தால் அந்தப் பிள்ளையின்ரை பிஞ்சு உடம்பு என்ன செய்யும். பிஞ்சு முருங்கைக்காய் தெறிக்கிறமாதிரித் துண்டு துண்டாகும். மோட்டச் சைக்கிளை ஓடினவக்குச் சீலையோடை கீழை பாயேலுமோ? அப்ப என்ன நடக்கும்? இவ்வளவும் கண்மூடித் திறக்கிறதுக்கிடையிலை சின்ன இடைவெளிக்கிடையிலை நடந்து முடிஞ்சு போம். பிறகு உடம்பு என்ன காரே?, புதுசாப் பாட்ஸா வாங்கிப் பூட்ட?

அப்ப இப்ப புதுசா சிங்களப் பொலிஸுமார் தமிழ் படிச்சிட்டு வந்து தமிழிலை கதைக்கிற மாதிரிக் "கனவம்" தேவை. அவை கனவம் எண்டால் கவனம் எண்டு விளக்கம். இந்த வருசம் 2018 தொடக்கத்தில் அண்டே வீதி விபத்திலை 4–5 சரி. போனது போனதுதானே? திருப்பி வருமே? சொல்லுறன் எண்டு குறை நினைக்க வேண்டாம். உங்கடை உங்கடை குடும்ப ஆக்களிட்டையே கேட்டுப் பாருங்கோவன்? உங்கடை ஓட்டத்தைச் சரி எண்டு சொல்லுவினமோ எண்டு.

மோட்டர் சைக்கிள் ஓட முன்னம் நீங்கள் ஓடுற முறை சரியோ? எண்டு உங்களையே நீங்கள் ஒருக்காக் கேட்டுப் பாருங்கோவன். சீலைத் தலைப்பையும், தலைமயிரையும் காத்திலை பறக்க விடாதையுங்கோ. அது உங்களுக்குப் பின்னாலை வாறவைக்கும் அபகடம் எண்டு தெரியுமோ?

போன கிழமை இடைத்தர வயசு மனிசி ஒண்டு வீச்சா வந்து மெல்லமாப் போன பட்டா ஒண்டுக்கும், கார் ஒண்டுக்கும் நடுவாலை தன்ரை மோட்டர் சைக்கிளை விட்டாப்போலை பிறேக்கைப் பிடிச்சு விழுந்து, சொன்னால் வெக்கக் கேடு பயத்திலை சீலையோடை சலம் போவிட்டுது. நிண்ட சனத்திலை கொஞ்சப்பேர் பட்டாவை ஓட்டினவர் பிழை எண்ணினம். மாற்றாக்கள் கார்க்காரரிலை பிழை எண்ணினம். மோட்டர் சைக்கிள் மனுசிக்கு நல்ல காயம். உடனை பொலிஸைக் கூப்பிட்டாப்போலை பொலிஸ் வந்து நிண்டவை எல்லாரையும் கலைச்சுப் போட்டு கார்காரரையும், பட்டாக்காராரையும் போகச் சொல்லிப்போட்டு மோட்டர் சைக்கிளை நடுவாலை விட்டதுக்கு மனுசிக்கு நல்ல பேச்சு. பொலிஸ்காரன் தான் ஆஸ்பத்திரியிலை போய் மருந்து கட்டத் துண்டு குடுத்து ஆளை அனுப்பினது. உப்பிடி பெண்டுகளின்ரை ஓட்டம் அவ்வளவாச் சரியில்லை. அதுக்காக எல்லா ஆம்பிளையளும் ஓடுறது சரி எண்டு சொல்லவரேல்லை. ஆனால் பெண்டுகள் படு மோசம். சைக்கிளிலை ஏறி இருந்தால் பின்முன் யோசிக்கிறேல்லை. ஓட்டந்தான்.

ஆனபடியால் மெல்லமாப் போங்கோ. யாழ்ப்பாணத்தின்ரை நீள அகலம் அவ்வளவா இல்லை. ஆமை வேகத்திலை போனாலும் ஒரு கரையிலை இருந்து மற்றக் கரைக்கு ஒரு மணித்தியாலத்திலை போகலாம். அப்ப ஏன் அவசரம்? அப்ப ஒரு 40–50க்குள்ளை போகலாந்தானே? உங்களை நம்பி பிள்ளை குட்டியள் இருக்கினம். குடும்பம் இருக்கு. நீங்கள் வேலை பாக்கிற இடத்திலை பொறுப்பு இருக்கு. விழுந்து கிழுந்து காலைக் கையை முறிச்சுப் போட்டுப் போய் ஆஸ்பத்திரியிலை படுத்துக் கிடந்தால் உங்களாலை எத்தினைபேருக்கு இட்டிடைஞ்சல் தெரியுமோ? அப்ப நிதானமாகப் போங்கோ. என்ன? விநாசி அண்ணை சொல்லுறதெல்லாம் நன்மைக்கு எண்டு விளங்கினால் சரி. என்ன?

- வில்லங்கம் விநாசி

# சாதி, மத அரசியலுக்கு மன்னாரில் இடமில்லை

## கூட்டணி வேட்பாளர் முழக்கம்

மன்னார், ஜன.10

"மன்னார் மக்களிடம் சாதியையும், மதத்தையும் முன்னிறுத்தி வாக்குக் கேட்க வருகின்றார்கள். ஆனால் அவற்றை நிராகரித்து சாதி, மத பேதமின்றி மக்களுக்கு யார் தன்னலமற்ற சேவையை வழங்குவார்களோ, அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும்" இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் மன்னார் நகர சபை வேட்பாளரும், மன்னார் நகர சபையின் முன்னாள் உப தலைவருமான செபஸ்ரியாம்பிள்ளை ஜேம்ஸ் யேசுதாசன்.

தமிழ் தேசிய விடுதலை கூட்டமைப்பு சார்பாக மன்னார் மாவட்டத்தில் ஐந்து உள்ளூராட்சி சபைகளுக்காக, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வு மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எமது தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவதை நாம் அனுமதிக்க முடியாது.

தமிழ் மக்கள் கொடுத்த ஆணைகளை எமது தமிழ் தலைவர்கள் தங்கள் சுய இலாபத்துக்காகப் பாவிப்பதை நாம் காண்கின்றோம்.

இன்று தென்னிலங்கையிலுள்ள மிதவாத சில அரசியல் தலைவர்கள் கூட தமிழ் மக்களுக்கு வடகிழக்கு இணைந்த சுயாட்சி முறைதான் நல்லது என ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஆனால் நாங்கள் வாக்களித்த தமிழ் தலைவர்களோ, வடகிழக்கு இணைப்புக்கு இப்பொழுது சரியான நேரம் இல்லை என்று சொல்கிறார்கள். ஏனென்றால் இது நடைபெறுமானால் தென்பகுதி குழம்பும் என அரசுக்கு இவர்கள் முட்டுக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். இதை உடைத்தெறிவதற்குத்தான் இன்று தமிழ் தேசிய விடுதலை கூட்டமைப்பு உதித்துள்ளது.

தேர்தல் தோல்வியைத் தவிர்க்க மதத்தையும், சாதியையும் முன்னிறுத்தி கேவலமான அரசியலைச் சிலர் முன்னெடுத்துள்ளனர். ஆனால் மன்னாரில் இவையெல்லாம் எடுபடாது. முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப், இப்படியான சாதி, மத பேதங்களை இல்லாதாக்கினார். அந்த மண்ணில் இப்படியான சாதி, மத ரீதியில் மக்களை எவரும் பிரிக்க முடியாது என்பதை வாக்குகளால் நிரூபியுங்கள்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## அந்தநாள் ஞாபகம்




**10.01.1974**

நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று பொலிஸார் திட்டமிட்டு ஏற்படுத்திய கலவரத்தில் சிக்கி 9 பேர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர்.

# அவரசமாக இறங்கியவர் ரயில் சில்லில் சிக்கினார்

## படுகாயத்துடன் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜன.10

ரயில் புறப்பட்டபோது அதில அவசரப்பட்டு இறங்க முயன்றவர் தவறி விழுந்ததில், சில்லுக்குள் அகப்பட்டு படுகாயமடந்தார்.

சாவகச்சேரி-சங்கத்தானை ரயில் நிலையத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் கொழும்பைச் சேர்ந்த அமரசிங்க ஆராச்சி ஜெயவர்த்தனே (வயது- 74) என்ற நபரே படுகாயமடைந்தவராவார்.

கொழும்பில் இருந்து சாவகச்சேரி -சங்கத்தானையை வந்தடைந்த தபால் ரயிலில் குறித்த நபர் வந்திருந்தார். அந்த ரயில் நிலையத்தில் ரயில் சில நிமிடங்கள் தரித்து நின்றபோது, கடைசி நிமிடத்திலேயே அங்கு தான் செல்ல வேண்டிய வாகனம் காத்திருக்கும் தகவல் அவருக்குக் கிடைத்தது. இதனால் அவர் ரயில் புறப்படும் சமயத்தில் அவசரப்பட்டு இறங்க முற்பட்ட போதே, ரயில் சில்லினுள் அகப்பட்டு கை மற்றும் கால்களில் படுகாயமடைந்துள்ளார்.



காயமடைந்த அவர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## அமைச்சர் அனந்தியின் நிதியில்

# 17 மாணவர்களுக்கு மிதிவண்டிகள்

யாழ்ப்பாணம், ஜன.10

மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனின் 2017 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டில் இருந்து வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 17 பாடசாலை மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. வட மாகாண சபை உறுப்பினர்களுக்கென 2017 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் இருந்து இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம், சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து மாணவிகள் உள்ளிட்ட 13 மாணவர்களுக்கு ஒரு லட்சத்து எண்பத்தையாயிரம் ரூபா ஒதுக்கீட்டில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

மருதனார்மடத்தில் அமைந்துள்ள வலிகாமம் வலயக் கல்வி பணிமனை வளாகத்தில் வைத்து அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க வலய கல்வி பணிமனை அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் மாணவர்களிடம் குறித்த மிதிவண்டிகள் கையளிக்கப்பட்டன.

இதே போன்று மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு மாணவி உள்ளிட்ட நான்கு மாணவர்களுக்கு இவ்வாறு அறுபதாயிரம் ரூபா ஒதுக்கீட்டில் 4 மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க, தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனை வளாகத்தில்நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் மாணவர்களிடம் மிதிவண்டிகள் கையளிக்கப்பட்டன. (அ)

# கர்ப்பிணிப் பசுவை கொன்ற பாதகர்கள்



யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியில் சினைப்பட்ட பசு மாடு ஒன்று சட்டவிரோதமாக இறைச்சிக்காக நேற்று வெட்டப்பட்டுள்ளது என நவாந்துறை மக்கள் விசனம் தெரிவித்தனர்.

"அந்தப் பசுவின் வயிற்றுக்குள் இருந்த கன்று சந்தைக் குப்பைத்தொட்டிக்குள் வீசப்பட்டுள்ளது. இந்தச் செயலில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் கைது செய்து தண்டிக்க வேண்டும்" என்றும் மக்கள் கேட்டுக்கொண்டனர்.

"குறித்த பசுவை இறைச்சிக்காக வெட்டியவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சுகாதாரப் பிரிவினரால் அனுமதிக்கப்பட்ட இடத்தில் மட்டுமே இறைச்சிக்கான மாடுகளை வெட்ட முடியும். இது சட்டவிரோதமாக வெட்டப்பட்டுள்ளது" என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தசநாயக்கவுக்கும் சகாக்களுக்கும் பிணை

கொழும்பு, ஜன.10

கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டீ.கே.பி.தசநாயக்க உள்ளிட்ட ஆறு பேருக்கும், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக்க, நேற்றுப் பிணை வழங்கினார்.

ஒவ்வொருவருக்கும் தலா 1 இலட்சம் ரூபா காசுப் பிணையும் 10 இலட்சம் ரூபா பெறுமதியிலான 3 சரீரப் பிணைகளின் அடிப்படையிலேயே, மேற்படி அறுவரையும் பிணையில் விடுவிக்க, நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன், ஒவ்வொரு வாரத்தின் சனிக்கிழமை தோறும், கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குச் சென்று கையொப்பமிட வேண்டுமெனவும் அவர்களது வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சாட்சியாளர்களுக்கோ அல்லது விசாரணைகளுக்கோ ஏதேனும் அழுத்தம் அல்லது அச்சுறுத்தல் விடுத்தால், பிணை இரத்து செய்யப்பட்டு, மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்படுவதாகவும், நீதிபதி அறிவித்தார்.

கடந்த 2008ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், 11 இளைஞர்களை



பலவந்தமாகக் கடத்திச் சென்று காணாமலாக்கினர் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்கான கடற்படையின் முன்னாள் பேச்சாளர் உட்பட அறுவரும், கடந்த வருடம் ஜூலை மாதம் 12ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மேற்படி அறுவரும், தமக்குப் பிணை வழங்குமாறு, கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்த போதிலும், அந்த மனு நிராகரிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையிலேயே, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த பிணை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி, கடும் நிபந்தனைகளுடன் கூடிய பிணையை வழங்க உத்தரவிட்டார்.(அ)

## மொழி உதவி அதிகாரிகள் 1000 பேர்

கொழும்பு, ஜன.10

மொழி உதவி அதிகாரிகள் 1000 பேர் 6 மாதம் பயிற்சி வழங்கப்பட்டு அரச நிறுவனங்களில் இந்த வருடம் நியமிக்கப்படுவார்கள் என்று தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

வைத்தியசாலை, பிரதேச செயலகம் மற்றும் பொலிஸ் நிலையம் போன்றவற்றுக்கு இந்த நியமனத்தில் முக்கியத்துவம் வழங்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

"அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிகொள்கையை நடைமுறைப்படுத்துவதே இதன் நோக்கமாகும். தேசிய பிரச்சினை 60 சதவீதம் இதன் மூலம் தீர்க்க உதவியாக இருக்கும். அனைத்து பிரச்சினைக்கும் தனது தாய் மொழியில் கடிதம் மூலமும் உரையாடல் மூலமும் செயற்பட சந்தர்ப்பம் கிடைக்கும்" என்றும் அமைச்சர் மனோ கணேசன் மேலும் குறிப்பிட்டார். (அ)

## சிவப்புச் சந்தனக்கட்டையை கடத்திய சீனர் பிடிபட்டார்

கொழும்பு, ஜன.10

பொரலஸ்கமுவ, அபேரத்ன மாவத்தையில், சிறிய ரக லொறியொன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட சிவப்பு சந்தனக் கட்டைகளுடன் சீனப் பிரஜை ஒருவரை, பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச்சுற்றிவளைப்பின்போதே, மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது, 30க்கும் மேற்பட்ட சந்தனக் கட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. 22 வயதுடைய மேற்படி சீனப் பிரஜையை, கங்கொடவில நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(அ)

# மீளாய்வு விண்ணப்பத்திற்கு ஜன.8 வரை அவகாசம்

கொழும்பு, ஜன.10

கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள்களை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமையுடன் நிறைவடைவதாக பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் சனத் பூஜித் தெரிவித்தார்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் இதற்கான விண்ணப்பங்களை பாடசாலை அதிபர் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். தனியார் பரீட்சார்த்திகள் பரீட்சை திணைக்களத்தினால் தேசிய பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாக விண்ணப்பங்களைத் தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டும். பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் இதற்கான விண்ணப்பத்தை பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.(அ)




ஏ- 9 வீதியில் - மாங்குளம் - கொக்காவிலில் நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில்.... (13)

# விசேட பொலிஸ் பிரிவு வேண்டும் போதைப் பொருளை கட்டுப்படுத்த

## முதலமைச்சரிடம் உறுப்பினர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 10

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொலிஸாரின் அசமந்தப் போக்கால் சிறுவர்கள் முதல் பெரியோர் வரை போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. அதனைக் கட்டுப்படுத்த வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நடவடிக்கை எடுக்க வேண்டும்"

- இவ்வாறு வடக்கு மாகாண சபையில் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

வடக்கு மாகாண சபையின் 115ஆவது அமர்வு நேற்று கைதடியில் உள்ள பேரவைக் கட்டடத்தில் நடைபெற்றது.

அதன் போது வடமாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் அயூப் அஸ்மீன், "யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. பொலிஸார் அசமந்தமாகச் செயற்பட்டு வருகின்றனர். அதனால் வடமாகாண சபை அது தொடர்பில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அதிமுக்கிய கவனயீர்ப்பு பிரேரணை ஒன்றைச் சபையில் கொண்டு வந்தார்.

அதனை ஆதரித்த ஆளும் கட்சி உறுப்பினர் எஸ்.சுகிர்தன் "யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளை இலக்கு வைத்து மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையை பரப்புகின்றார்கள். அது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்காது அசமந்தமாக செயற்படுகின்றார்கள்.

எனவே அவற்றை கட்டுப்படுத்த முதலமைச்சர் பொலிஸ் அதிகாரிகளை அழைத்து பேசுவதுடன் சிறப்புப் பொலிஸ் குழுவை நியமித்து போதைப்பொருள் பாவனையை மாணவர்கள் மத்தியில் பரவவிடாது கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

மற்றுமொரு ஆளும் கட்சி உறுப்பினரான இ. ஜெயசேகரம், "சட்டம் ஒழுங்குக்கு பொறுப்பானவர் எனும் வகையில் முதலமைச்சர், பொலிஸ், கடற்படை மற்றும் மாகாகண சபை உறுப்பினர்களை அழைத்து சிறப்புக் கூட்டம் ஒன்றைக் கூட்டி நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

# அட்டமியில் அமர்வு: நடுக்கத்தில் உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 10

வடக்கு மாகாண சபையின் இறுதியாண்டுக்கான முதலாவது அமர்வு அட்டமி நாளில் ஆரம்பித்தமை தொடர்பில் உறுப்பினர்கள் கடும் விமர்சனங்களை தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சபை தனது ஐந்தாவதும் இறுதியுமான ஆண்டில் காலடி வைத்துள்ளது. இதன் 115 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது.

அமர்வின் ஆரம்பமே குற்றம் சுமத்தும் பல்லவியுடன் ஆரம்பமானது. இதையடுத்து எதிர்க் கட்சி உறுப்பினர் தவநாதன் உரையாற்றியபோது, கடந்து சென்றவை என்று நாம் எதனையும் விட்டுவிட முடியாது. எமக்குப் பெரும் பொறுப்புக்கள் இருக்கின்றன. இன்றைக்கு இங்கு நடக்கின்றதைப் பார்க்கின்ற போது அட்டமியில் ஆரம்பிக்கப்பட்டமை போன்றதாகவே இருக்கின்றது. ஏன் அட்டமியில் ஆரம்பிக்கப்பட்டதென்று தெரியவில்லை என்றார். (ச)

# தொடர்ச்சிகள்

### 10000 இலங்கையருக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருவிழாவுக்கு இம்முறை இலங்கையிலிருந்து பத்தாயிரம் ப்க்தர்கள் கலந்து கொள்ள முடியும். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயக்ன் தெரிவித்தார்.

கச்சதீவு திருவிழாவுக்கான ஏற்பாடுகள் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு அரச அதிபர் தலைமையில் நேற்று நடந்தது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கச்சதீவில் இம்முறை இலங்கையில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் அதிகளவான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முறை இலங்கையில் இருந்து 10 ஆயிரம் பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு ஏற்ற வகையில் சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவிழாவுக்கான ஒழுங்குகளுக்கான பிரதான பொறுப்பை கடற்படை ஏற்றுள்ளது. அதேபோன்று ஏனைய துறையினர் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதன்படி தத்தமது சேவைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பக்கர்களின் நலன் கருதி நிரந்தர மலசல கூட வசதிகள் மற்றும் மேலதிகமாக தற்காலிக மலசல கூட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 23ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகாட்டுவான் வரையான பேருந்து சேவை அதிகாலை 4 மணியில் இருந்து பிற்பகல் 1 மணிவரை நடைபெறும். அதே போன்று குறிகாட்டுவானில் இருந்து கச்சதீவு வரை காலை 5 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 2 மணி வரை படகுச் சேவைகள் இடம்பெறும். படகுச்சேவைக்கான ஒருவழி கட்டணமாக 300 ரூபா அறவிடப்படவுள்ளது. நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கு ஒரு வழி கட்டணமாக 225 ரூபா அறவிடப்படவுள்ளது.

அத்துடன் சேவையில் ஈடுபடும் படகுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே சேவைக்கு அனுமதிக்கப்படும். பயணிகள் பாதுகாப்பு அங்கி அணிய வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இம்முறை பொலிஸ் பாதுகாப்பு வசதிகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. 200 பொலிஸார் சேவையில் ஈடுபடவுள்ளனர். பயணிகள் படகு சேவை இடம்பெறும் போது கடற்படை ரோந்து நடவடிக்கைகள் நடைபெறும் - என்றார். (ச)

### அம்புலன்ஸில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையின் 115ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. இதில், கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் நிரந்தரமான மகப்பேற்று நிபுணர் இல்லை. மத்திய அரசாங்கத்திடம் பல தடவைகள் கேட்டும் பயனில்லை. தாய்மாரை அம்புலன்ஸ்வண்டி மூலம் வெளிமாவட்ட வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லவேண்டிய தேவை எழுகின்றது.

இந்த நிலையில் கடந்த மாதம் மட்டும் 15 பிரசவங்கள் அம்புலன்ஸ் வண்டிகளில் நடந்துள்ளன. மேலும் ஒரு கர்ப்பிணித் தாயை அவசர சிகிக்சைப் பிரிவில் வைத்து மயக்க மருந்து கொடுக்க முடியாமல் வவுனியா வைத்தியசாலைக்கு மாற்ற வேண்டிய நிலையும் உருவானது. அங்கே மயக்க மருந்து நிபுணரும் இல்லை. இதேபோன்று பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி போன்ற வைத்தியசாலைகளிலும் மருத்துவர்கள் இல்லை. இது தொடர்பாக பல தடவைகள் மத்திய அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறியும் இது வரை ஆக்கபூர்வமான பதில் இல்லை. வடக்கு முதல்வரிடம் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்த போது அவர் ஜனாதிபதியைச் சந்தித்து இந்த விடயத்தைக் கூறுவதற்கான நேரத்தை ஒதுக்கக் கோரி, அரசின் அனுமதிக்காகக் காத்துகொண்டிருக்கின்றார்" என்றும் குறிப்பிட்டுள்ளார். (அ)

### கொக்காவிலில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏ- 9 வீதியில் - மாங்குளம் - கொக்காவிலில் நேற்றிரவு 8.30 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ஹைஏஸ் வாகனமே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது. எரு ஏற்றிச் சென்ற லொறி இயந்திரக் கோளாறால் வீதியில் நின்றது. அச்சமயம் அதி வேகமாக வந்த ஹைஏஸ் வான் அதனுடன் மோதியது.

இதில், ஹைஏஸ் வானில் பயணித்த நான்கு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே துடிதுடித்துப் பலியாகினர். ஒருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

இந்த விபத்தில் மரணமான அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வருகின்றது. விபத்துத் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ச)

### யாழ். வருகிறார்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறார்.

யாழ். வரும் ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெறும் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்பார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

### படுகொலை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இறுதி நாளான 10 ஆம் திகதி பொலிஸார் திட்டமிட்டு தாக்குதல் நடத்தினர்.

மின்கம்பியை நோக்கி அவர்கள் சுட்டதில் மின்சாரம் தாக்கி மாநாட்டில் பங்கேற்ற 9 தமிழர்கள் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் தமிழர்கள் ஒவ்வொருவரின் மனதிலும் நீங்காத வடுக்களை ஏற்படுத்தின.

இதன் பின்னரே தமிழீழக் கோரிக்கை வலுவாக முன்வைக்கப்பட்டு, போராட்டத்துக்கான நியாயங்களும் வலியுறுத்தப்பட்டன. இச்சம்பவம் இடம்பெற்று 44 ஆண்டுகள் கடந்தபோதும், இப்படுகொலையில் இதுவரை எவருக்கும் தண்டனையோ, அல்லது நஷ்ட ஈடோ கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

### நன்மதிப்பு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைய ஒதுக்கும் நிதியில் நான் கல்விக்கு ஒதுக்கிய நிதிக்கான வேலைகள் நடக்கவில்லை. வவுனியா மாவட்டத்தில் 9 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால் மாவட்டத்தில் என் மீதான நன்மதிப்புக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது.

இதனை அமைச்சர் திட்டமிட்டே தடுத்து வைத்துள்ளார். அவர் இப்படி ஏன் செயற்படுகிறார். அவரால் முடியாவிட்டால் அந்த நிதியை வேறொரு அமைச்சுக்கு மாற்றிக் கொடுக்க வேண்டும்.

நடக்கவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நல்லவர்களை தெரிவு செய்ய வேண்டும் என முதலமைச்சர் கூறியிருக்கிறார். அவர் நியமித்த அமைச்சர் சபையிலும் தவறு இருக்கிறது. எனது இந்த நிதிப் பிரச்சினையை முதலமைச்சர், அவைத் தலைவர் உரிய கவனமெடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினார்.

இதற்குப் பதிலளித்த கல்வியமைச்சர் க.சர்வேஸ்வரன் அவ்வாறு திட்டமிட்ட நோக்கில் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை. ஒதுக்கீட்டுப் பிரச்சினைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தான் அழைத்துப் பேசியிருந்தார் - எனக் கூறினார். (ச)

### 15 மாதங்களின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுன்னாகத்தில் கைதான செல்வநாயகம் சத்தியசாயி பாபா என்பவருக்கே இவ்வாறு பிணை வழங்கப்பட்டது. போதைப் பொருளை விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்தில் கைதான இவர் கடந்த 2016 ஒக்ரோபர் 8 ஆம் திகதி தொடக்கம் மல்லாகம் நீதிமன்றால் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

சந்தேக நபரின் மனைவி அவருக்காக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்தார். விசாரணைகள் இடம்பெற்று பிணை விண்ணப்பம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந்த, சந்தேகநபரை பிணையில் விடுவிக்க ஆட்சேபணை இல்லை என மன்றிடம் விண்ணப்பம் செய்தார்.

"சந்தேகநபர் 50 ஆயிரம் ரூபா பணத்தை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வைப்பிலிட வேண்டும். 2 இலட்சம் ரூபா பெறுமதியான உறுதிப்படுத்தக்கூடிய இருவர் பிணை முறியில் கையொப்பமிட வேண்டும். சந்தேகநபரின் கடவுச்சீட்டு மல்லாகம் நீதிமன்றப் பதிவாளரிடம் கையளிக்கப்பட வேண்டும். மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் கையொப்பமிட வேண்டும் ஆகிய நிபந்தனைகள் மன்றினால் விதிக்கப்படுகிறது" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் பிணை விண்ணப்பம் மீதான கட்டளையை வழங்கினார். (ச)

# எதிரிகளிடையே சுமூகம்

சியோல், ஜன. 10

வட கொரியா - தென் கொரியாவுக்கிடையில் சுமூகப் பேச்சு ஒன்று நடைபெற்றுள்ளது.

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் அடுத்த மாதம் தென்கொரியாவின் யியோங்சங் நகரில் நடக்கவுள்ளது. இந்தப் போட்டிகளில் பங்கேற்க வடகொரிய அணியை அனுப்ப பரிசீலனை செய்வதாக அந்த நாட்டின் அதிபர் கிம் ஜாங் உன் கூறியிருந்தார். இது தொடர்பாக இரு நாடுகளும் விரைவாக ஆலோசனை நடத்தி சாத்தியக் கூறுகளை விவாதிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.,

கிம் கருத்தை வரவேற்ற தென்கொரிய அதிபர் முன் ஜே-இன், உடைந்த உறவை முன்னேற்றுவதற்கான ஒரு வாய்ப்பு என்று கூறியிருந்தார்.

இந்நிலையில், வடகொரிய - தென்கொரிய எல்லையில் உள்ள பான்முன்ஜோம் என்ற கிராமத்தில் இரு நாட்டு உயரதிகாரிகள் பங்கேற்ற இந்தப் பேச்சு நேற்று நடந்தது. இதில், உடன்பாடு எட்டப்பட்டதையடுத்து, ஒலிம்பிக்கில் வடகொரியா பங்கேற்பது உறுதியாகியுள்ளது.

இதற்கிடையே, இரு நாடுகளுக்கும் இடையேயான இந்தப் பேச்சுக்கள் குறித்து ரஷ்யா மகிழ்ச்சி வெளியிட்டுள்ளது.



பெற்ரோல், டீசல் மற்றும் நிலக்கரி எனப் பல்வேறு தடைகளுக்கு வடகொரியா உள்ளாகியுள்ள நிலையில், கிம்-இன் இந்த முடிவு அவர் கீழே இறங்கி வரத் தயாராக உள்ளார் என்பதையே காட்டுகிறது என அரசியல் நிபுணர்கள் விமர்சித்துள்ளனர். (ஐ)



## சில்க்தான் வேணும்

சென்னை, ஜன. 10

நடிகரும், இயக்குநருமான பார்த்தீபன், தான் அடுத்ததாக இயக்கவிருக்கும் படத்துக்கு கவர்ச்சி நடிகை சில்க் சுமிதா மாதிரி பெண் வேண்டும் என்று தேடி வருகிறார்.


தற்போது உள்ள சூழ்நிலையில், இணையத்தளம் சினிமா உலகில் முக்கிய இடம் பிடித்து வருகிறது. ஒரு நாயகன் மற்றொரு நாயகிக்கு வாழ்த்துத் தெரிவிப்பது, நடிகைகள் தங்களுடைய கவர்ச்சிப் புகைப்படங்களை வெளியிட்டு வாய்ப்புத் தேடுவது, இயக்குநர்கள், நடிகர், நடிகைகளை இணையத் தளத்தில் தேடுவது என கொலிவூட் புதிய டிரென்ட்டாகி வருகிறது.

இந்நிலையில், நடிகரும், இயக்குநருமான பார்த்தீபன் உள்ளே வெளியே 2ஆம் பாகம் இயக்க முடிவு செய்துள்ளார். இதில் நடிக்கும் நட்சத்திரங்களை இணையத்தளம் மூலம் தேடி வருகிறார்.

தனது டுவிட்டரில் அவர் வெளியிட்டுள்ள தகவலில், "2018 இல் தொடங்கும் உள்ளே வெளியே நகைச்சுவைப் படத்துக்கு, 18 வயதில் அமைதி-வசீகரமான பெண்ணும், 28 வயதில் கவர்ந்திழுக்கும் சில்க் சுமிதா போன்ற பெண்ணும், 36 வயதில் இளம் பெண்ணின் அழகிய அம்மாவும் தேவை' எனத் தேடுதல் வேட்டையைத் தொடங்கியிருக்கிறார்.

'உள்ளே வெளியே' படத்தின் முதல் பாகத்தை 1993 ஆம் ஆண்டு பார்த்தீபன் இயக்கினார். அதில் இடம்பெற்ற இரட்டை அர்த்த வசனங்கள் ரசிகர்களிடையே நல்ல வரவேற்புப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புவியீர்ப்பு விசையை கண்டுபிடித்தவர் நியூட்டன் இல்லையாம்



ஜெய்ப்பூர், ஜன. 10

நியூட்டனுக்கு முன் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தவர் பிரம்மகுப்தா 2 என ராஜஸ்தான் கல்வி அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார்

ராஜஸ்தான் பல்கலைக் கழகத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் மாநில கல்வித்துறை அமைச்சர் வாசுதேவ் தேவநானி கலந்து கொண்டார். அவர் நிகழ்ச்சியில் பேசும்போது,

"ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புவியீர்ப்பு விசைக்கான விதியை பிரம்மகுப்தா 2 கொண்டு வந்துள்ளார்.

நாம் அனைவரும் புவியீர்ப்பு விசைக்கான விதியை நியூட்டன் கண்டுபிடித்துள்ளார் எனப் படித்துள்ளோம். ஆனால், ஆழமாக ஆய்வு செய்தோமென்றால், புவியீர்ப்பு விசைக்கான கொள்கையை பிரம்மகுப்தா 2, ஆயிரம் வருடங்களுக்கு (நியூட்டனுக்கு) முன் கண்டுபிடித்துள்ளார் என்பது தெரிய வரும். இந்த உண்மையை நாம் ஏன் பாடத் திட்டத்தில் சேர்க்கவில்லை? என கேள்வி எழுப்பியுள்ளார்.

சர்ச்சைக்குரிய பேச்சுக்களை குறித்த அமைச்சர் பேசுவது புதிதல்ல. கடந்த வருடம் அவர், பசு, மூச்சு விடும்பொழுது ஒக்சிசனை வெளியிடும் ஒரே விலங்கு எனக் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தினகரனின் முதல் எதிர்ப்பு!



சென்னை, ஜன. 10

தமிழக சட்ட சபையின் நேற்றைய அமர்வை தினகரன் வெளிநடப்புச் செய்துள்ளார்.

தமிழக சட்டப் பேரவையின் இரண்டாம் நாள் நேற்று நடைபெற்றபோது, எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு முதல்வர் மற்றும் அமைச்சர்கள் பதிலளித்து வந்தனர்.

111 எம்.எல்.ஏக்களுடன் பெரும்பான்மை இல்லாமல் தமிழக அரசு உள்ளது என தி.மு.க. எம்.எல்.ஏ. ஜெஅன்பழகன் கூறினார்.

தகுதி நீக்கம் செய்யப்பட்ட 18 எம்.எல்.ஏக்களைத் தவிர்த்துவிட்டு பார்த்தால் பெரும்பான்மை குறித்த உண்மை விளங்கும் என அமைச்சர் தங்கமணி பதில் அளித்தார்.

இந்த நிலையில், பேரவையிலிருந்து டி.டி.வி.தினகரன் வெளிநடப்புச் செய்தார். அதன்பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

"பெரும்பான்மை அரசு என அமைச்சர் தங்கமணி கூறிய கருத்துக்கு விளக்கமளிக்க மறுப்புத் தெரிவித்ததால் வெளிநடப்புச் செய்தேன்.

தி.மு.க.வுடன் கூட்டணி என்று என் மீது குற்றஞ்சாட்டினர். என் மீதான குற்றச்சாட்டுக்கு நான் பதிலளிக்க அனுமதி கேட்டபோது, அனுமதி மறுத்தனர். அமைச்சர் தங்கமணி, 18 எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்கம் குறித்துப் பேசியதற்கும் பதில் சொல்ல அனுமதி கேட்டேன். அதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது. அதனால், சட்டப்பேரவையிலிருந்து வெளிநடப்புச் செய்தேன்' எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் நட்பு ரீதியில் பேசினால் தவறா?" என்று தெரிவித்தார். (ஐ)

## குடியரசு தினத்தை குறிவைக்கும் சுந்தர் சி

சென்னை, ஜன. 10

சுந்தர்.சி. இயக்கத்தில் உருவாகி இருக்கும் 'கலகலப்பு-2' படம் தணிக்கைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், இந்திய குடியரசுத் தினத்தை முன்னிட்டு படத்தை வெளியிட படக்குழுத் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சுந்தர்.சியின் அவ்னி சினிமக்ஸ் தயாரிப்பில் உருவாகி இருக்கும் படம் 'கலகலப்பு-2'.

சுந்தர். சி. இயக்கத்தில் 'கலகலப்பு' படத்தின் இரண்டாவது பாகமாக உருவாகியிருக்கும் இந்தப் படத்தில் ஜீவா, ஜெய், மிர்ச்சி சிவா, நிக்கி கல்ராணி, கத்தரின் தெரேசா ஆகியோருடன் நந்திதா சிறப்புத் தோற்றத்தில் நடித்திருக்கிறார். சதீஷ், ரோபோ ஷங்கர், மனோ பாலா, விரிவி கணேஷ், வையாபுரி, சந்தான பாரதி, விச்சு உள்ளிட்ட பலரும் நடித்திருக்கும் இந்தப் படத்துக்கு ஹிப்ஹொப் ஆதி இசையமைத்திருக்கிறார். (ஐ)



# கோடிகளுக்குச் சொந்தமான அதிர்ஷ்டசாலிகளைக் காணோம்

நியூயோர், ஜன. 10

அமெரிக்காவில் நடைபெற்ற 'பவர்போல் ஜக்பொட்' மற்றும் 'மெகா மில்லியன்ஸ்' ஜக்பொட் குலுக்கல்களில் சுமார் 100 கோடி அமெரிக்க டொலர்களைப் பரிசாக வென்ற இரு அதிர்ஷ்டசாலிகள் யார் என்பது இதுவரை தெரியாததால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதியன்று நடைபெற்ற குலுக்கலில் அமெரிக்காவின் தென்கிழக்கு மாநிலமான புளோரிடாவில் விற்பனையான ஒரு சீட்டுக்கு 45 கோடி டொலர்கள் ஜக்பொட் பரிசு கிடைத்துள்ளது. அந்த மாநிலத்தில் விற்பனையான ஒரே பவர்போல் டிக்கெட் என்ற முறையில் இதை விற்பனை செய்த போர்ட் ரிச் பகுதியில் உள்ள கடை மிகவும் பிரபலமாகி விட்டது.

இந்த அதிர்ஷ்ட சீட்டை விற்பனை செய்த வகையில் கடையின் உரிமையாளருக்கு ஒரு லட்சம் டொலர் போனசாகக் கிடைக்கும்.




இதேபோல், நியூ ஹேம்ப்ஷைர் மாநிலத்தின் மெர்ரிமேக் பகுதியில் உள்ள ரீட்ஸ் பெர்ரி மார்கெட் என்னும் கடையில் விற்பனையான டிக்கெட்டுக்கு கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற குலுக்கலில் 55.9 கோடி டொலர் பரிசாகக் கிடைத்துள்ளது.

இந்தக் கடை நூறாண்டுகளுக்கும் மேலாக இப்பகுதியில் இயங்கி வருகிறது. இந்த அதிர்ஷ்ட சீட்டை விற்பனை செய்தவருக்கு 75 ஆயிரம் டொலர்கள் போனசாகக் கிடைக்கும்.

ஜனவரி 8ஆம் திகதி நிலவரப்படி, இந்த இரு ஜாக்பொட் பரிசுகளை வென்றவர்கள் யார்? என்று தெரியாததால் ஊடகங்களின் வழியாக அமெரிக்கர்கள் மத்தியில் பரபரப்புத் தொற்றிக் கொண்டுள்ளது. (ஐ)

# இந்தியக் கிரிக்கெட் சபைக்குள் பரபரப்பு



மும்பை, ஜன. 10

மும்மை வான்கடே மைதானப் பகுதியில் அமைந்துள்ள, இந்தியக் கிரிக்கெட் சபை அலுவலகத்தில் இந்திய வருமானவரித்துறை அதிகாரிகள் 15 மணிநேரம் சோதனை நடத்தியமையால் அங்க பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தியக் கிரிக்கெட் சபை ஆண்டுதோறும் வருமானவரி கணக்குகளை சமர்ப்பித்து வருகிறது.

தற்போது கிரிக்கெட் சபையை தலைமைச் செயல் அதிகாரி ராகுல் ஜோரி நிர்வகித்து வருகிறார். மேலும் அவருக்கு சந்தோஷ் ரங்கநேக்கர் உறுதுணையாக இருக்கிறார்.

இதற்கிடையே கடந்த ஆண்டு பி.சி.சி.ஐ. வருமான வரிக்கணக்கு சமர்ப்பித்ததில் வருமானவரிப் பிடித்தம் தொடர்பாக அதிகாரிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து மும்மை வான்கடே மைதானத்தில் அமைந்துள்ள கிரிக்கெட் சபை அலுவலகத்தில் வருமானவரித்துறை அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினார்கள்.

அங்குள்ள ஆவணங்களை அவர்கள் பார்வையிட்டுத் தொடர்ந்து சோதனை மேற்கொண்டனர். சுமார் 15 மணிநேரம் இந்தச் சோதனை நடந்தது. ராகுல் ஜோரி, சந்தோஷ் இருவரையும் வருமான வரித்துறை அலுவலகத்தில் ஆஜராகுமாறு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது.

கடந்த 4ஆம் திகதி காலை 11 மணி முதல் 5ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை இந்தச் சோதனை நடந்தது. எனினும், தற்போதுதான் இந்தச் சோதனை குறித்த தகவல்கள் வெளியாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## மீண்டும் மத்யூஸ்



கொழும்பு, ஜன.10

இலங்கை அணிக்கான ஒருநாள் மற்றும் "ரி-20"போட்டிகளுக்கான தலைவராக அஞ்சலோ மத்யூஸ் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை அணியின் தலைவராக இருந்த மத்யூஸ் கடந்த ஆண்டு தனது தலைவர் பதவியை ராஜினாமாச் செய்திருந்தார். அதைத் தொடர்ந்து இலங்கை அணிக்கு ஒரு நாள் அணித் தலைவர்களாக உபுல் தரங்கா, திசர பெரேரா, தினேஷ் சண்டிமால், லசித் மலிங்கா மற்றும் சமர கபுகெதர ஆகியோர் செயற்பட்டனர். தலைவர்களை மாற்றினாலும் இலங்கை அணி தொடர்ந்து தடுமாறியே வருகிறது. இந்நிலையில் இலங்கை அணிக்குத் தலைவர் யார் என்பது குறித்து நேற்று முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் போட்டியில் இலங்கை டெஸ்ட் அணித் தலைவரான தினேஷ் சண்டிமால் மற்றும் மத்யூசின் பெயர்களே அடிபட்டன. இந்த நிலையிலேயே 2019 ஆம் ஆண்டு வரை இலங்கை அணிக்கான ஒருநாள் மற்றும் "ரி-20" போட்டிகளுக்கு மத்யூஸ் தலைவராக இருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தற்காலிகத் தடை



தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தைப் பயன்படுத்தியமை கண்டிபிடிக்கப்பட்டதால் இந்தியக் கிரிக்கெட் வீரர் யூசுப் பதான் 5 மாதங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்பது, தடைக் காலம் முடியும் தருவாயில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கிரிக்கெட் வீரரான யூசுப் பதான், கடந்த ஆண்டு போட்டியில் டர்புடலினின் எனும் தடை செய்யப்பட்ட பொருளைப் பயன்படுத்தியமை சோதனையில் தெரியவந்தது. இதைத் தொடர்ந்து அண்மையில் ரஞ்சிக் கிண்ணத் தொடரில் விளையாட யூசுப் பதானை பரோடா மாநில கிரிக்கெட் சங்கம் தேர்வு செய்ய வேண்டாம் என இந்தியக் கிரிக்கெட் சபை கேட்டு கொண்டது. இதனால், பரோடாவுக்காக பதான் ஒரே ஒரு போட்டியில் மாத்திரமே விளையாடி இருந்தார்.

டெர்பியூட்டலின் உள்ள ப்ரோசெட் என்ற மருந்து ஒன்றை உட்கொண்டது. டெர்பியூட்டலின் ஒரு தடை செய்யப்பட்ட பொருளாக இருந்தாலும், முன் அனுமதி பெற்றிருந்தால் வீரர்கள் அதை எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். ஆனால் பதான் அணி வைத்தியரிடம் முன் அனுமதி பெறவில்லை.

கிரிக்கெட் வீரர்யூசுப்பதான் தடைசெய்யப்பட்ட ஒரு பொருளை கவனமின்றி உட்கொண்டுள்ளார். இது பொதுவாக இருமல் மருந்தில் காணப்படும். இது குறித்த பதானின் விளக்கத்தை ஏற்று இந்தியக் கிரிக்கெட் சபை திருப்தி அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் எந்தவொரு கிரிக்கெட்டையும் பதான் விளையாடவில்லை. இப்போது மேற்கொண்ட ஊக்க மருந்து சோதனையில் சிக்கிய இரண்டாவது இந்தியக் கிரிக்கெட் வீரர் ஆவார்.

இந்த 5 மாதத் தடைக்காலம் ஓகஸ்ட் 15, 2017 முதல் எதிர்வரும் 14ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடையும்.

2012 ஐ.பி.எல். போட்டியில் தடை செய்யப்பட்ட மருந்தைப் பயன்படுத்தினார் என டில்லிப் பந்து வீச்சாளரான பிரதீப் சங்வான் 18 மாதங்கள் தடை விதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இறுதியில் றோயல்



மாகாணமகுடம் உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டத்தில் றோயல் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

மைக்கல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் மின்னொளியில் நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில், இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் மோதியது.

பரபரப்பாக நடைபெற்ற இப் போட்டி 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

பின்னர் வழங்கப்பட்ட 'பனால்டி' உதையில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது. (ஐ-66)

# நவஜீவனஸ், றேஞ்சஸ் கழகங்கள் வெற்றி





நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில், நவஜீவன்ஸ் மற்றும் றேஞ்சஸ் கழகங்கள் வெற்றிபெற்றுள்ளன.

நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகம் 50 ஆண்டு நிறைவையொட்டி நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 8 அணிகளுக்கிடையலான சுழற்சி முறையிலான போட்டிகள் அம்பாள் மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியிலு உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில், 5:1 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் 3:1 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (ஐ-66)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 10.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.